## இயல் 6.6 - தகவல் செயலாக்கம்


பயிற்சி எண் :: 6.6.1.1.A

முறையாகப் பட்டியலிடுதல்

### தகவல் செயலாக்கம் - முறையான தகவல்களின் அனுகூலங்களை ஓர் உதாரணத்தின் மூலம் விளக்குக



கவிதா ஒரு திருமணத்திற்கு வந்திருக்கும் விருந்தினர்களை கணக்கிடும் காட்சி.



ராகுல் அவன் வகுப்பில் அமர்ந்திருக்கும் சக மாணவ மாணவியரை எண்ணும் காட்சி.

### காட்சி அமைப்புகளின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்

| | |
|---|---|
| 1. அமர்ந்திருப்பவர்கள் ஒரு ஒழுங்கில்லாமல் அமர்ந்திருக்கிறார்கள். ஆகையால் அவர்களை எண்ணுவது கடினம். ஒரு விருந்தினரை கணக்கிலிருந்து விட்டுவிடவோ, அல்லது இருமுறை கூட்டிவிடவோ வாய்ப்பு உள்ளது. | 1. வகுப்பில் அமர்ந்திருக்கும் மாணவர்கள் ஒரு ஒழுங்குடன் வரிசையில் அமர்ந்திருக்கிறார்கள். ஆகையால் குறுக்கு மற்றும் நெடு வரிசைகளை கணக்கிட்டு மொத்த மாணவர்களை எண்ணுவதில் தவறு வருவதற்கு வாய்ப்பு மிகக்குறைவு. |
| 2. திருமண மண்டபத்திற்குள்ளும் வெளியிலும் அடிக்கடி விருந்தினர் சென்றுவருவர். ஆகையால் எண்ணிக்கையில் தவறுதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. | 2. வகுப்பில் மாணவர்கள் ஒரு குறித்த நேரம்வரை அவ்வாறே அமர்ந்திருப்பர். ஆகையால் மொத்த மாணவர்களை எண்ணுவதில் தவறு வருவதற்கு வாய்ப்பு மிகக்குறைவு. |
| 3. விருந்தினர் ஒரு ஒழுங்கில்லாமல் அமர்ந்திருப்பதால் இடையில் யாரும் அமராமல் இருக்கும் நாற்காலிகள் நம் எண்ணிக்கைக்கு தடையாக அமையும். | 3. வகுப்பில் இடையில் ஒரு மாணவன் அமரவில்லையானாலும் அதை நாம் எளிதில் கண்டு மொத்தத்தொகையில் குறைத்தோ கூட்டியோ சரியான எண்ணிக்கையை கணக்கிட்டுவிடலாம். |
| 4. ஆனால் இந்த எண்ணிக்கையில் வரும் சிறு தவறுகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. இதுபோன்ற சூழ்நிலைகளில் நமக்கு எண்ணிக்கையின் உத்தேச மதிப்பே தேவைப்படும். உதாரணமாக, சரியாக 410 விருந்தினர்கள் வந்திருக்கும் நிலையில் அதை கவிதா 400 என்றோ அல்லது 420 என்றோ கணக்கிட்டாலும் அதனால் அதிக பாதகமில்லை. | 4. அதே நேரத்தில், ஒரு வகுப்பில் எத்தனை மாணவ மாணவியர் ஒரு தினத்தில் வந்திருக்கின்றனர் எனும் எண்ணிக்கை பள்ளியின் வருகை பதிவேட்டு கணக்கிற்கு மிக முக்கியத்துவமானது. எனவே, இங்கு மாணவ மாணவியரின் சரியான எண்ணிக்கையை ராகுல் பெறுவது மிக அவசியம். |

**இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் படிப்பினை**

பொதுவாக நாம் எண்ணும் பொருட்களை வரிசைப்படுத்தி அவற்றின்மேல் கணிதக் கோட்பாடுகளை பயன் படுத்தினால் மிக எளிதாக நாம் உத்தேசிக்கும் விடையை பெற்றுவிடலாம்.

Sum & solution prepared on Wednesday 15th September, 2021 :: 09:45 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.